23rd July 1957]

**Sri P. S. CHINNADURAI** : சபாநாயகர் அவர்களே, "ப்ளான்டேஷன்" தொழிலாளர்களுக்கு தனியாக ஒரு தொழில் கோர்ட் ஏற்படுத்தி, அந்தத் தொழிற் கோர்ட்டும் தீர்ப்பளித்திருந்தது. அந்தத் தீர்ப்பிலே கூறப்பட்டிருந்த சம்பள விகிதங்களைக் காட்டிலும் குறைவான சம்பள விகிதத்தை இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்குத் தெரிவித்ததா ? அவ்வாறு தெரிவித்ததோடு மட்டுமில்லாமல், அந்தக் குறைவான சம்பள விகிதத்தை ஒத்துக்கொள்ளும் படியாகவும் அவர்களை மறைமுகமாய் நிர்ப்பந்தித்ததா?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இந்தத் தோட்டத் தொழிலில் இருக்கும் தகராறுகளைத் தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட கோர்ட்டு 3½ வருஷ காலம் நடந்தது. அதன் பிறகு ஒரு சம்பள விகிதமும், இன்னும் பல சலுகைகளும் அந்தத் தீர்ப்பின் மூலமாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பின்பு தோட்ட முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டுக்கு அதை எடுத்துச் சென்று "ஸ்டே" வாங்கி விட்டார்கள். இந்தத் தீர்ப்பின் பேரில் சுப்ரீம் கோர்ட் முடிவு செய்வதற்கு இன்னும் மூன்று நான்கு வருஷங்கள் ஆனால், அதற்குள் தொழிலாளர்கள் பலர் மாண்டு விடுவார்களே என்று பயந்து, கூடிய அளவுக்கு, நல்ல முறையிலே, உடனடியாக, அதிகப்படியான சலுகை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நடுத்தரமாக ஒரு கூலி விகிதத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்று சர்க்காருடைய அபிப்பிராயத்தைக் கூறினார்கள். அதைத் தொழிலாளர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இதில் எந்த விதமான நிர்ப்பந்தமும் இல்லை. நாளைக்கு வருகின்ற பலாக்காயை விட இன்றைக்கு வருகிற களாக்காயே நல்லது என்பது தொழிலாளர் அங்கத்தினர்கள் நன்றாக அறிந்து கொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : The Hon. Minister was just now saying that the whole matter was *subjudice* since it was pending before the Supreme Court . . .

**Mr. SPEAKER** : He did not say that. In a way, I was going to suggest myself that in view of the Labour Demand now under discussion, hon. Members, instead of spending time on putting supplementaries, may raise the subject during the discussion on the Demand.

*Assembly Sessions in the Nilgiris*

* 209 *Q*.—**Sri K. SATTANATHA KARAYALAR** (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to hold the Assembly Sessions in the Nilgiris during 1958?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : No, Sir. If the House unanimously decides to hold a Session at Ootacamund, steps will be taken to convene a meeting of the Assembly at Ootacamund.

**Sri S. LAZAR** : Will the Government ascertain the views of the Members individually?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : I think it depends on the political parties and if all the parties agree, certainly steps could be taken.

**Sri M. P. SUBRAMANIAM** : சட்டசபைக் கூட்டத்தை சென்னையில் வைப்பதைவிட உதகமண்டலத்தில் வைத்தால் எவ்வளவு அதிகப்படியாக செலவு ஆகும் என்பதைக் கணக்கெடுத்து கனம் அமைச்சர் அவர்கள் சபைக்கு அறிவிப்பார்களா ?

[23rd July 1957

THE HON. SRI C. SUBRAMANIAM: 6 வார காலத்திற்கு சட்டசபைக் கூட்டத்தை உதகமண்டலத்தில் நடத்தினால் சுமார் 50 ஆயிரம் ரூபாய் அதிகமாக செலவாகும் என்று முன்பே சொல்லப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM: Has any political party given any indication that it does not want that the sessions should be held at Ootacamund?

THE HON. SRI C. SUBRAMANIAM: The political parties are hesitant. If any decision is taken, perhaps they want to exploit that decision. They do not want to take the initiative.

SRI J. MATHA GOWDER: *நீலகிரி ஜில்லாவாசிகளுடைய அனுகூலத்திற்காகத்தான் சடடசபைக் கூட்டத்தை நீலகிரியில் வைக்கவேண்டும் என்று சொல்கிறோம் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அந்த ஜில்லாவின் நன்மையைக் கருதியாவது அங்கு சட்டசபைக் கூட்டத்தை நடத்துவதற்கு முன்வருவார்களா?*

THE HON. SRI C. SUBRAMANIAM: அரசியல் கட்சிகள் இதையும் மனதில்கொண்டு என்ன முடிவுசெய்யவேண்டும் என்பதை யோசிப்பார்கள் என்று நம்புகிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR: சட்டசபைக் கூட்டத்தை குற்றாலத்தில் நடத்துவதைப்பற்றி யோசிப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: குற்றாலத்தில் போதிய வசதிகள் ஏற்பட்டால், அந்தக் காலத்தில் யோசிக்கவேண்டும். அது அடுத்த தலைமுறையில்தான் ஏற்படும் என்று நான் நினைக்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: In the Business Advisory Committee, I find almost all the leaders of parties are represented. Will they come to a decision whether to have the sessions at Courtallam or at Ootacamund as early as possible?

THE HON. SRI C. SUBRAMANIAM: I hope the Business Advisory Committee will take note of the suggestion made by the hon. Lady Member.

*Leprosy*

* 210 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR AND SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the incidence of leprosy in the State in 1955 and 1956 districtwise and the present position; and

(*b*) the steps taken during the course of these two years to check this disease?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Since a regular survey for all the districts has not been conducted, it is not possible to give exact information regarding the incidence of leprosy in each district during 1955 and 1956. The general order of endemicity of the disease in the districts from the highest to the lowest may be taken to be as follows:—

South Arcot, North Arcot, Chingleput, Salem, Tiruchirappalli, Madurai, Ramanathapuram, Tanjore, Tirunelveli, Kanyakumari, Coimbatore and the Nilgiris.